செய்தி வெளியீடு **நாள் : 29.09.2025**

கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சி பணிகளின் முன்னேற்றம் குறித்தும், முடியும் தருவாயிலுள்ள பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் துறைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் உரிமையாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.09.2025) சென்னை, தாளமுத்து நடராஜன் மாளிகையிலுள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சி பணிகளின் முன்னேற்றம் குறித்தும், தற்போதிய நிலை குறித்தும் மற்றும் முடியும் தருவாயிலுள்ள பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவது குறித்தும் துறைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் உரிமையாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநரும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி கண்காணிப்பு அலுவலருமான திரு.பா.கணேசன் இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., தலைமை திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், தலைமை பொறியாளர்கள் (சிஎம்டிஏ) திரு.மகாவிஷ்ணு, (மாநகராட்சி) திருமதி.ராஜேஸ்வரி, (சென்னை குடிநீர்) திரு.ராதாகிருஷ்ணன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், மின்சார வாரியம், மாநகராட்சி ஆகியோர் உடனிருந்தனர்..

Verified RealEstate